முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15 திகதி முதல்
சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 திகதி வரை
(02.10.2022 ஞாயிறு முதல் 09.10.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலிதனில் தருமத்தை காத்து
   கண்ணியமாய் வளர்த்து வருகின்ற
   அழியாமை பெற்ற அரங்கமகானை
   அகத்திய மகரிஷி யானும் போற்றியே
2. போற்றியே இந்தியா தமிழகத்தின்
   புகலுவேன் சுபகிருது நங்கை திங்கள்
   உற்றதொரு மூவைதிகதிமேல் இருபானீர்திகதி
   உத்தமமாய் நடக்கும் நிகழ்வாய் எதிர்கால பலன்குறித்த
3. பலன்குறித்த ஆசிதனை உரைப்பேன்
   பாடிட தமிழகம் தன்னிலே
   சலனமற சிறுகுறுந் தொழிலுடன்
   சாற்றிட வளர்ச்சிநிலை காணும்
4. காணவே மக்களை சமூகத்தை
   காக்கின்ற கட்டமைப்புகள் தானும்
   தானாக வளர்ச்சிநிலை கூடும்
   தலைமை கண்டிக்காத சில மாந்தர்கள்
5. மாந்தர்கள் பதவியை பயன்படுத்தி
   மதவழி பங்கம் அவச்சொல்
   சிந்தையிலா செயல்பாடு கண்டு
   சிக்கலை ஏற்படுத்த நேரும்
6. நேருமை இன்றி சில துறைகளின்
   நிர்வாகிகள் கையூட்டு கலந்து
   பெருமை என பொருளை சேர்த்து
   பின்னடைவை ஆளுமைக்குச் சேர்க்கும்
7. சேர்க்கவே இந்தவித பங்கம்
   சேவை மறந்த நிலைப்பாடு
   பார்த்துரைக்க சடுதி களைஎடுப்பாக
   பாரதம் தமிழகம் அதிரடி துவக்க
8. துவக்கவே சேவைக்கானதொரு
   துறைகள் அனைத்தும் நிமிர்ந்து
   அவமதிப்பில்லா உயர நேரும்
   அளவிலா வளர்ச்சிநிலை கண்டு

9. கண்டுமே இந்தியா தமிழகம்
கட்டாயம் தேவைகள் பூர்த்திமேல்
தொண்டுவழி அபரிமித மாற்றம்கண்டு
தெரிவிப்பேன் பிற தேசங்கள் வியக்க
10. வியக்கவே அற்புதங்கள் படைக்கும்
வேலவன் வழிபாடு குறைகள் ஏற்க
தயக்கமற ஞான ஆட்சியாக மலரும்
தாமுரைத்த வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15 ம் நாள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 22 ம் நாள் 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள்:

மாமாயை சூழ்ந்த கலியுகத்திலும் உயிர் காக்கும் தருமத்தை காப்பாற்றி கண்ணியமாய் வளர்த்து வருகின்ற அழிவிலாத நிலையைப் பெற்றிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அகத்திய மகரிஷி யானும் போற்றியே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள் 02.10.2022 ஞாயிற்று கிழமை முதல் புரட்டாசி மாதம் 22ம் நாள் 09.10.2022 ஞாயிற்று கிழமை வரை நிகழ விருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இனி வரும் காலத்திலே நாட்டினில் சிறுகுறு தொழில்கள் வளர்ச்சி நிலையை அடைந்திடும் நாட்டு மக்களையும் சமூகத்தையும் காக்கின்ற கட்டமைப்புகள் இனி வளர்ச்சி அடையும் ஆயினும் நாட்டினில் ஒருசிலரால் அவர்கள் வகிக்கும் பதவியைப் பயண்படுத்தி மதத்தின் சார்பாக தவறாக நடந்து அவச் சொற்களாலும் பின்விளைவுகளை யோசிக்காமல் நடப்பதாலும் நாட்டினில் சில சிக்கல்களை ஏற்படுத்தக் கூடுமப்பா.

சிலதுறைகளில் அதிகாரிகள் நேர்மை இல்லாமல் நடப்பதுடன் கையூட்டையும் பெற்று கையூட்டு பெறுவதை பெருமையாக எண்ணியே பொருளை சேர்ப்பார்கள் இதனால் நாட்டை ஆள்பவர்களுக்கு பின்னடைவு உண்டாகும்.

ஆகவே நாட்டை ஆட்சி புரிகின்றோர் இந்தவிதமான குறைபாடுகள் உண்டாகாமல் தடுக்கும் விதமாக அவர்களை களையெடுக்கும் விதமாக அதிரடியாக செயல்பாடுகளை கண்டால் சேவைத் துறைகள் அனைத்தும் விரைந்து செயல்பட்டு மக்களின் நம்பிக்கையை அரசு பெற்று அத்துறைகள் எல்லாம் அவமதிப்புகள் நீங்கி விரைந்து உயர்வான நிலைகளை அடைந்து சிறப்படையும். நல்ல வளர்ச்சிகளையும் அவை காண்கும்.

இந்தவித அரசின் தூய செயல்பாடுகளினால் இந்தியா தமிழகம் நாட்டின் சுய தேவைகள் பூர்த்தி ஆவதோடு தேவைக்கு மேலாக உற்பத்தி பெருகி சிறந்த செயல் பாடுகளால் அபரிமிதமான மாற்றங்களை அடைந்து உலகின் மற்றய தேசங்கள் எல்லாம் வியக்குமாறு பல விதமான அற்புதங்களை செய்திடும். நாட்டினில் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் வழிபாடு பெருக பெருக ஆட்சிமுறை நீதியும் நேர்மையும் மிக்க கருணையே வடிவான ஞான ஆட்சியாக மாற்றம் அடையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–